# யாழ்ப்பாணத்தை விடுவித்த தமிழர் படை

22

## காக்கை வன்னியன் முதல் கதிர்காமர் வரை...




### வரலாற்றுத் தொடர்

செண்பகப் பெருமாள் யாழ்ப்பாணம் நல்லூரில் இருந்து அரசாண்ட காலத்தில் சிங்களக் குடியேற்றம் ஒன்று யாழ்ப்பாணத்தில் நிகழ்ந்ததாகவும் பல புத்த பள்ளிகள் அங்கு உருவாக்கப்பட்டதாகவும் சொல்லப்படுகிறது. இவன் தமிழனாகவும், சைவ சமயத்தவனாகவும், இருந்த போதிலும் தனது வளர்ப்புத் தந்தையான 6-ம் பராக்கிரமபாகுவிற்குப் பின் கோட்டை இரா-ச்சியத்திற்கு தானே அரசனாக வேண்டும் என்ற எண்ணத்தில் சிங்களவர்களுக்கும் பௌத்த மதத்திற்கும் அதிக முக்கியத்துவம் கொடுத்து வந்தான்.


ஆனால் கி.பி. 1467 ஆம் ஆண்டு கோட்டை அரசனான 6 ஆம் பராக்கிரமபாகு தான் முன்பு திட்டமிட்டபடி தன் பேரனை கோட்டை அரசனாக முடி சூட்டினான். இதைக் கேள்வியுற்று கடும் சினங்கொண்ட செண்பகப் பெருமாள் யாழ்ப்பாணத்திலிருந்து கோட்டைக்குப் படையெடுத்துச் சென்று பராக்கிரமபாகுவின் பேரனனான சிறுவனைக் கொன்று ஆட்சியைக் கைப்பற்றி ஸ்ரீசங்கபோதி புவனேகபாகு எனும் பட்டத்துடன் கோட்டைக்கு அரசனானான். அதே சமயம் விஜய பாகு என்பவனை தன்னுடைய பிரதிநிதியாக இருந்து யாழ்ப்பாணத்தை அரசாளும்படி நியமித்தான்.

விஜயபாகு யாழ்ப்பாணத்து அரசனானவுடன் தமிழ் நாட்டில் திருக்கோவிலில் தஞ்சம் புகுந்திருந்த சிங்கை நகர மன்னன் கனகசூரிய சிங்கையாரியன் தனது மகன்மாருடன் சேர்ந்து பெரும் படை ஒன்று திரட்டி வந்து விஜயபாகுவைக் கொன்று இழந்த அரசை மீண்டும் கைப்பற்றினான்.

செண்பகப் பெருமாளினால் தன் பழைய தலைநகரான சிங்கை நகர் அழிக்கப்பட்டதாலும் நீண்ட காலமாக அந் நகர் பராமரிக்கப்படாமல் பாழடை-ந்து போயிருந்ததாலும் கனக சூரியன் அதை மீண்டும் தலை நகராக்காது. செண்கப்பெருமாளால் தலை நகராக்கப்பட்ட நல்லூரரையே தனது இராஜதானியாக்கிக் கொண்டதுடன் தனக்கு வயதாகிவிட்டதால் தனது மூத்த மகனை சிங்கைப் பரராச சேகரன் என்னும் பட்டத்துடன் அரசனாக்கினான்.

**விஜயபாகு யாழ்ப்பாணத்து அரசனானவுடன் தமிழ் நாட்டில் திருக்கோவிலில் தஞ்சம் புகுந்திருந்த சிங்கை நகர மன்னன் கனகசூரிய சிங்கையாரியன் தனது மகன்மாருடன் சேர்ந்து பெரும் படை ஒன்று திரட்டி வந்து விஜயபாகுவைக் கொன்று இழந்த அரசை மீண்டும் கைப்பற்றினான்.**

தங்களது முன்னோர்களைப் போல் சிங்கை ஆரியச் சக்கரவர்த்தி என்ற பட்டத்தைச் சூடாமல், தங்களது முன்னைய தலைநகரான சிங்கை நகரின் பெயரால் 'சிங்கை' என்ற பெயரை தன்னுடைய பெயருடன் சூடிக் கொண்ட பரராச சேகரன் தன்னுடைய புதிய தலைநகரான நல்லூரரைப் புதுப்பித்து, இராஜ வீதிகளையும் அரண்மனைக்குரிய மாளிகைகளும், நந்தவனங்களையும் தச்சர், கொல்லர், ஓவியர், தட்டார், இரத்தின வணிகர், புலவர், இசை நூல் வல்லபாணர், அந்தணர், மருத்துவர், சோதிடர், முதலானோர்களுக்கு, அவரவரது தகுதிக்குத் தக்கபடி மாளிகைகளும் அமைத்ததோடு நல்லூர், நகருக்கு நாற் திசையிலும் ஒவ்வொரு திசைக்கு ஒன்றாக சட்டநாதர் கோவில், வெலுகந்தை பிள்ளையார் கோவில், கைலாயநாதர் கோவில் வீரமாகாளி அம்மன் கோவில் என்பவற்றையும் கட்டுவித்தான், நல்லூர் கந்தசுவாமி கோவிலுக்கும் தனது அரண்மனைக்கும் அண்மையில் பெரிய ஏரி ஒன்றை வெட்டி வைத்து இந்தியாவிலுள்ள யமுனா நதியில் இருந்து புனித நீரைக் கொண்டு வந்து அதில் ஊற்றி அதற்கு யமுனாரி என்று பெயரும் வைத்தான்.



இவற்றை விட தனது தந்தையின் காலத்தில் சிங்கை நகரில் செண்பகப் பெருமாளால் சிதைத்து அழிக்கப்பட்ட தமிழ் சங்கத்தை புனரமைத்து தமிழ் புலவர்களையும், தமிழ் வித்துவான்களையும் அழைத்து தமிழ் மொழியை வளர்ப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்தான். இவனது மைத்துனனும் வட மொழி வித்துவானுமாகிய அரச கேசரி 'இரகு வம்சம்' என்னும் வட மொழிக் காப்பியத்தை தமிழில் மொழி பெயர்த்து இவனது சபையில் அரங்கேற்றினான். அது மட்டுமன்றி பரராச சேகரன் உலா என்ற நூலும் இவன் காலத்தில் எழுதப்பட்டதாக நம்பப்படுகிறது.

பரராச சேகரனுக்கு, பட்டத்தரசி இராச லட்சுமி அம்மாளுக்கு சிங்கபாகு, பண்டாரம் என இரண்டு மகன்களும், அரச கேசரியின் சகோதரியும் இரண்டாவது இராணியுமாகிய வன்னியம்மைக்கு பரநிருப சிங்கன் என்ற ஒரு மகனும் மூன்றாவது மனைவியான மங்கத்தம்மாவுக்கு சங்கிலி என்றொரு மகனும் பிறந்தார்கள்.

யாழ்ப்பாண வைபவமாலையை எழுதிய மயில்வாகனப் புலவர் போர்த்துக் கேயர் யாழ்-ப்பாணத்தைக் கைப்பற்றிய போது அரசாண்ட சங்கிலிக்கும், இலங்கைப் பரராசசேகரனின் மகனும் மங்கத்தம்மாவின் புதல்வனுமான சங்கிலிக்கும் சரித்திரக் குழப்பம் உண்டாகும்படி மாற்றி எழுதி விட்டார் என்பது முதலியார் இராஜநாயகத்தினது வாதம். போர்த்துக்கேயர் காலச் சங்கிலி செகராசசேகரன் என்ற பெயரால் அழைக்கப்படுவதாகவே போர்த்துக்கேயர்களது குறிப்புக்களில் இருந்து அறியமுடிகிறது.

சிங்கைப் பரராசசேகரனது காலத்தில் வருங்காலம் உரைப்பதில் வல்லவரான ஞானி ஒருவர் அவனது அரசவைக்கு வந்து பராசசேகரனுக்குப் பின் அவனது மூன்றாவது மனைவியின் மகனான சங்கிலியே கபடத்தனமாக அரசை அபகரிப்பான் என்றும் பின் அவனை பறங்கியர்கள் கொன்றுவிட்டு 40 வருடங்கள் கொடுங்கோலாட்சி நடாத்துவார்கள் என்றும் அதன் பின் ஒல்லாந்தர்கள் அவர்களைத் துரத்திவிட்டு 120 வருடங்கள் அரசாண்டு சைவ சமயத்தை பாழாக்கி தங்கள் சமயத்தைப் பரப்புவார்கள் என்றும், அதன் பின்பு ஆங்கிலேயர்கள் 79 வருடங்கள் குடிகளை வருத்தி அதிக வரி விதித்து கொடுங்கோல் ஆட்சி நடாத்துவார்கள் என்றும் அவர்கள் ஆட்சி முடிவுக்கு வருங்காலத்தில் சேதமடைந்து கவனிப்பாரற்றுக் கிடந்த சிவாலயங்கள் புனரமைக்கப்படுமென்றும், ஆங்கிலேயருக்குப் பின் பிரெஞ்சுக்காரரும் ஒல்லாந்தர்களும் இராச்சியத்தை கபடமாக அபகரித்து கொழும்பிலிருந்து அரசாள்வார்கள் என்றும் பின்பு வாலசிங்கன் என்னும் ஒருவனு-க்கு இராச்சியத்தை ஒப்படை-த்து விட்டுப்போவார்கள் என்றும் பரராச சேகரனுடைய சந்ததிக்கு இராச்சியம் ஒருபோதும் திரும்பி வராது என்று கர்ண பரம்பரைக் கதை ஒன்றை அடி-ப்படையாக வைத்து மயில்வாகனப் புலவர் எழுதியுள்ளார்.

உண்மையில் திருக்கோணே-ஸ்வரம் கோயில் பிரகாரக் கல்வெட்டொன்றில் அக் கோயில் திருப்பணியை பறங்கிகள் பிரிப்பார்கள் என்றும் அதன் பின் அக் கோயில் கட்டப்படமாட்டாதென்றும் அது பற்றி பின்னால் வரும் அரசர்கள் அக்கறை கொள்ளமாட்டார்கள் என்றும் எழுதப்பட்டிருந்ததாக கி.பி.1624-ம் ஆண்டு கோணேஸ்வரர் கோயிலை இடித்து அக் கோயில் கற்களைக் கொண்டு திருக்கோணமலைக் கோட்டையைக் கட்டியதை கொன்ஸ்தாந் தினோ து சா என்னும் போர்த்துக்கேயப் படைத் தளீபதி எழுதியுள்ள குறிப்பில் இரு-ந்து அறிய முடிகின்றது.

மேற்படி கோவில் கல்வெட்டில் "முன்னே குளக் கோடன் முட்டுந் திருப்பணியை பின்னே பறங்கி பிரிக்கவே -மன்ன" என்று அமைத்து முதல் இரண்டு அடியையும் வாசிக்கக் கூடியதாகவும் பின்னடி இரண்டும் அவ்வாறில்லாமல் குழம்பிப் போய்க் கிடப்பதனால் அவற்றைச் சீர் செய்து உண்மையான அடி எது வெனக் காணமுடியாது "முன்னாட் குளக் கோட்டன் மூட்டுந் திருப்பணியைப் பின்னாட் பறங்கி பிடிப்பனே - பொன்னாடும்

பூனைக் கண் செங்கண்
புகைக்கண்ணனாண்ட பின்பு
தானும் தமிழாய் விடும்"

என யாரோ ஒருவர் இதை ஒரு வெண்பாவாக்கி முடித்து விட அதைப் பார்த்த மயில்வாகனப் புலவர் அப்படியே தனது நூலில் எழுதி விட்டாரென்றும் இது வரை வெளியே வராது மறைந்து போயிருக்கும் பரராசசேகரன் உலா வெளிவிடும் வரை, உண்மையில் இவ்வாறு ஒரு முனிவர் பரராச சேகரனின் அவைக்கு வந்து இப்படிச் சொன்னாரா என்பதை அறிய முடியாதுள்ளதாக முதலியார் இராஜநாயகம் குறிப்பிடுகிறார்.

திருக்கோணமலைக் கோட்டையில் சிதைவடைந்ததுபோக இப்போது

ளனேகுள
காட முட்டு
ருப் பணியை.
ணனே பறங்கி
ககவே மனன
னபொணணா
னையயறற
ணா
கள.... என்ற எழுத்துக்களே வாசிக்கக் கூடிய நிலையில் உள்ளன. இதனை வண்ணார் பண்ணையைச் சேர்ந்த நெ.வை. செல்லையா என்னும் தமிழ் பண்டிதர்

(மு)ன்னே குள(க்)
(கே)காட(ன்) மூட்டு(ந்)
(தி)ருப் பணியை(ப்)
(பி)ன்னே பறங்கி(பி)
(ரி)க்கவே மன்ன(வ)
(பி)ன் பெண்ணா(த)
(த)னையியற்ற (வழி)
(த்)தேவைத் (து)
(எண்)ணா(ரேபின்)
(னரசர்)கள்_ என்று பூர்த்தி செய்துள்ளார்.

**- நக்கீரன்**